**செ.வெ.எண்:33** **நாள்:17.10.2019**

# அரியலூர் மாவட்டத்தில் தூர்வாரப்பட்ட நீர்நிலைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

அரியலூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை நீர் வள ஆதாரத்துறையின் சார்பில் குருவாலப்பர்கோவில் கிராமத்திலுள்ள பொன்னேரியில் மதகுகள் சீரமைக்கப்பட்ட பணிகள் மற்றும் மல்லூர் கிராமத்தில் உள்ள மாணிக்கவாசகர் ஓடை மற்றும் அருங்கால் ஓடையில் குடிமராமத்து பணிகளின் கீழ் அணைக்கட்டு புனரமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், மல்லூர் கிராமத்தில் உள்ள மாணிக்கவாசகர் ஓடையில் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் 613 மீட்டர் நீளமுள்ள வடிகாலினையும், பழுதடைந்துள்ள அணைக்கட்டினையும் புனரமைக்கும் பணியினையும், புதிய அணைக்கட்டு ஒன்று புதுப்பிக்கப்பட்டு, பணிகள் முடிவுற்றதை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. தொடர்ந்து, அருங்கால் ஓடையில் ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் அணைக்கட்டு புனரமைக்கும் பணியினைகளை பார்வையிட்டு, ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், குருவாலப்பர்கோவில் கிராமத்திலுள்ள 700 ஏக்கர் நீர் பிடிப்பு பகுதியை கொண்ட பொன்னேரியில் 4100 மீட்டர் கரையின் இருபுறங்களும் முற்புதற்கள் அகற்றப்பட்டு, 2100 மீட்டர் தூரம் கொண்ட கரையினை கிராவல் மண் நிரப்பி கரைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஏரியிலுள்ள நீர் ஆதாரத்தைக் கொண்டு 1374 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெருகிறது. இக்குடிமராமத்துத் திட்டப்பணிகள் மூலம் பொன்னேரியில் சுற்றியுள்ள 6 கிராமங்களில் விவசாய பயிர்களை பயிரிடும் பணிகளை மகிழ்ச்சியுடன் தொடங்கியுள்ளனர். மேலும், குடிநீர் ஆதாரமான நிலத்தடி நீரும் உயர்ந்துள்ளது. மதகு புதுப்பிக்கப்பட்டு தண்ணீர் கசியாத வண்ணம் சீரமைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி விவசாயம் செய்து, அதிக மகசூல் பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து, ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், கொடுக்கூர் மற்றும் இலையூர் ஆகிய கிராமங்களில் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்வதை மாவட்ட ஆட்சிததலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வின்போது, திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சுந்தர்ராஜன், உதவி இயக்குநர் பழனிசாமி, உதவி செயற்பொறியாளர் (நீ.வ.ஆ.து) சாந்தி மற்றும் விவசாயிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**